**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC.224/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.2 |
| Name | : | செல்வகுமாரி |
| Father's Name/Husband Name: | | தெய்வம் |
| Village | : | திருமாந்துறை |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 30 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.07.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர்)**

**சாட்சியானவர் கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மனு அனுமதிக்கப்பட்டு எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் B.A., English முடித்துள்ளேன். நான் B.A., English என்று போலிஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி சக்திவேல் மற்றும் எதிரி ரேவதியின் வீட்டில் தான் வழக்கு சம்பவம் நடந்தது என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் நான் என்ன வேலைக்கு சென்றேன் என்றால் கார்டன் வேலைக்கு சென்றேன். காலையில் எத்தனை மணிக்கு வேலைக்கு சென்றுவிட்டு எத்தனை மணிக்கு திரும்புவேன் என்றால் காலை 8 மணிக்கு சென்றுவிட்டு மாலை 5 மணிக்கு வீட்டிற்கு வருவேன். எங்கே உள்ள கார்டனில் வேலைக்கு சென்றேன் என்றால் திருமாந்துறை டோல்கேட் அருகில் கால் கிலோ மீட்டர் தள்ளி. எங்கள் வீட்டிற்கும் எதிரி சக்திவேல் வீட்டிற்கும் இந்த வழக்கு பிரச்சனைக்கு முன்பாக ஏதேனும் பிரச்சனை உள்ளதா என்றால் உள்ளது எதிரிகள்

எங்களை ஜாடை மாடையாக பார்த்து திட்டுவார்கள் எங்கள் வீட்டை ஏன் பார்க்கிறீர்கள் என்று திட்டுவார்கள்.

வழக்கு சம்பவத்திற்கு பிறகு நாங்கள் தான் எதிரியின் வீட்டை பார்க்கும் விதத்தில் கேமராவை வைத்து அவர்கள் வீட்டை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்றால் சரியல்ல எனது அம்மா வீட்டில் அனைவரும் வேலைக்கு சென்றுவிடுவதால் பாதுகாப்பிற்காக எனது அம்மா வீட்டில் கேமரா வைத்தார்கள். சம்பவம் நடக்கும் போது என்ன கிழமை என்றால் 5 வருடங்கள் ஆனதால் எனக்கு ஞாபகமில்லை, சம்பவத்தன்று நான் வேலைக்கு சென்று வந்தேனா என்றால் ஆமாம். எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் மாலை 5–5.30 மணிக்குள். எனது முதல் விசாரணையில் நான் சொல்வது போல் எதிரிகள் அறுவாளை எடுத்துக் கொண்டு எங்களை வெட்ட வந்தார்கள் என்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

சம்பவ சமயத்தில் சண்டையை யார் விலக்கினார்கள் என்றாலும் எங்களை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றாலும் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டு எனது அண்ணனுக்கு போன் செய்தார்கள். எனது அண்ணன் பிரபாகரன் அங்கு வந்து என்னையும், எனது அம்மாவையும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். எனது அண்ணன் மருத்துவமனைக்கு அழைத்து சென்ற விவரத்தை நான் முதல் விசாரணையிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

நான் சொல்வது போல் சொன்ன விதத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் நான், எனது அம்மா மற்றும் என் அண்ணன் அனைவரும் சேர்ந்து எதிரியை பார்த்து எச்சைத் துப்பி பிரச்சனை செய்தோம் என்றாலும் சரியல்ல, பிரச்சனை சமயத்தில் என் அண்ணன் வீட்டில் இல்லை எனது அப்பாவுடன் வேலைக்கு சென்றிருந்தார்.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.